பக்கங்கள்:-21

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 23 | செவ்வாய்க்கிழமை | 06.02.2024 | அதிர்வு 189 |
|---|---|---|---|---|---|

## தமிழ்க் கட்சிகளை சந்திக்கிறார் மோடி

இலங்கைத் தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களை இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார் என்று கொழும்பு ஊடகம் 06▶



# இலங்கையில் காட்டாட்சி!

## தேர்தல் நடந்தால் மக்கள் நிச்சயம் பதிலடி வழங்குவர் இந்தியத் தூதுவருடனான சந்திப்பில் சஜித் தெரிவிப்பு

"இலங்கையில் தற்போது பொலிஸ் அராஜகம் தலைவிரித்தாடுகின்றது. ரணில் - ராஜபக்ஷக்கள் தலைமையில் காட்டாட்சியே நடைபெறுகின்றது. தேர்தல் ஒன்றை இந்த அரசு நடத்தினால் வாக்குகள் மூலம் மக்கள் நிச்சயம் பதிலடி வழங்குவார்கள். இதனாலேயே தேர்தல்களை நடத்த இந்த அரசு அஞ்சுகின்றது."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 06▶



### இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகரான

## அஜித் டோவலை சந்தித்தார் அநுர





இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்றுப் பிற்பகல் இந்தியத் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் 06▶





இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னைய மத்திய குழுவின் கூட்டத்தை வரும் ஞாயிற்றுக்கிழமை 11ஆம் திகதி வவுனியாவில் கூட்டி, நிலைமையை ஆராயும் மாவை சேனாதிராஜாவின் முயற்சி பலனளிக்கும் போல் தெரியவில்லை.

சிங்கப்பூரில் மகனின் திருமண நிகழ்வுக்காக புறப்பட்ட மாவை சேனாதிராஜா, அதற்கு முன்னர் கட்சியின் முன்னைய நிர்வாகச் செயலாளருடன் 06▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# கெஹெலிய புரிந்த மோசடி படுகொலைக்கு ஒப்பானது

## ஜனக ரத்நாயக்க தெரிவிப்பு



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவின் இம்யுனோகுளோபுளின் மோசடி ஒரு படுகொலை நடவடிக்கை எனப் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

“முன்னாள் சுகாதார அமைச்சருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள தரம்குறைந்த இம்யுனோகுளோபுளினை இறக்குமதி செய்தார் என்ற குற்றச்சாட்டை , அவர் படுகொலையில் ஈடுபட்டுள்ளார் என கருதவேண்டும்.

அமைச்சர் உரிய நடைமுறைகளை பின்பற்றாமல் மருந்துகளை இறக்குமதி செய்துள்ளார். நாட்டின் அப்பாவி மக்களிற்கு அவற்றை வழங்கியுள்ளார்.

எத்தனை பேர் இதன் காரணமாக உயிரிழந்தனர் என்பது எங்களிற்கு தெரியாது. ஆகவே இந்த விவகாரம் குறித்து நாங்கள் மேலும் ஆராயவேண்டும். இரண்டாம் உலக யுத்தத்தில் ஹிட்லரின் படுகொலைகள் போன்றது இது எனக் கருதவேண்டும். ஹிட்லரும் விசஊசியை செலுத்தி மக்களை கொன்றார்.

கெஹெலியவிற்கு வழங்கப்படும் தண்டனை இலங்கையில் அரசியல்வாதியொருவருக்கு வழங்கப்படும் மிகச்சிறந்த தண்டனையாக இருக்கவேண்டும்.

எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பது தெரியாது நோய் அறிகுறிகளை பரிசோதிப்பதற்காக தடுப்புமருந்துகளை அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கும் செலுத்த வேண்டும்.

பொதுவாக அரசியல்வாதிகள் மோசடி ஊழலில் ஈடுபடுவது குறித்து வெட்கப்படுவதில்லை.” – என்றார்.

# இலங்கையில் புற்றுநோயால் சிறுவர்கள் அதிகம் பாதிப்பு

## விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தகவல்

மக்களின் வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தினால் இலங்கையில் புற்றுநோயால் சிறுவர்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

கொழும்பு சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

”ஆண்டுதோறும் வெளியாகும் தரவுகளின் படி புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ளது. அதாவது 450 இல் இருந்து 900 ஆக அதிகரித்துள்ளது.

சிறுவர்கள் ஒரே இடத்தில் நீண்ட நேரம் அமர்ந்திருப்பதும், அதையே தொடர்ந்து நாளாந்தம் செய்வதுமே இதற்குக் காரணமாகும். குறிப்பாக சிறுவர்கள் கையடக்கத் தொலைபேசிகளுக்கு அடிமையாகி வருவது பிரதான காரணமாக விளங்குகிறது.

ஒரே இடத்தில் நீண்ட நேரம் அமர்ந்திருப்பதற்கும், தொற்றா நோய்களின் அதிகரிப்புக்கும் இடையே தொடர்பு உள்ளது. குறிப்பாக இளம் வயதினரிடையே லுகேமியா மற்றும் மூளை புற்றுநோய் அதிகரித்து வருகிறது.



எனவே புற்று நோயை கட்டுப்படுத்துவதில் அன்றாட வாழ்க்கை முறை முக்கிய பங்கை வகிக்கிறது. பெற்றோர்கள் இனிப்பு பானங்கள் மற்றும் தின்பண்டங்களை தங்கள் பிள்ளைகள் உட்கொள்வதைக் கட்டுப்படுத்த வேண்டும்.

புற்றுநோயால் பாதிக்கப்படுவதை தடுப்பதற்கு குழந்தைகளுக்கு இரண்டு வயது வரை தாய்ப்பால் கொடுக்க வேண்டும்.” – என்றார்.

# மரம் முறிந்து வீழ்ந்ததில் அஞ்சல் அதிபர் மரணம்!

மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் ஓய்வுபெற்ற அஞ்சல் அதிபர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தம்புள்ளை – சிசிரவத்தை பகுதியில் நேற்று இடம்பெற்றது.

அதே பகுதியைச் சேர்ந்த 73 வயதுடைய நபரே உயிரிழந்தார்.

மேற்படி மரத்தை நேற்று சிலர் வெட்டிக் கொண்டிருந்தபோது, மரத்தின் கீழ் நின்றவரே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தின் பின்னர், அவர் தம்புள்ளை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இதேவேளை, கம்பளை பகுதியில் உள்ள சர்வதேச பாடசாலையொன்றில் நேற்று மரம் முறிந்து வீழ்ந்ததில் 5 வயது மாணவன் ஒருவர் பலியாகியுள்ளார். மேலும் இரு மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

அதேவேளை, கடந்த சனிக்கிழமை நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நியூட்டன் தோட்டத்தில் மரம் வெட்டியபோது மரக்கிளை முறிந்து வீழ்ந்ததில் 14 வயது மாணவன் ஒருவர் பரிதாபகரமாகப் பலியாகியுள்ளார்.



# மக்களின் காணி உரித்தை உறுதிப்படுத்தியமை அரசாங்கத்தின் தனித்துவமான வெற்றியாகும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெருமிதம்

"காணி உரிமை கோரி உலகில் பல புரட்சிகள் இடம்பெற்ற போதிலும், புரட்சியின்றி இந்நாட்டு மக்களுக்கு நிரந்த காணி உரிமையை வழங்க முடிந்தமை தற்போதைய அரசாங்கத்திற்குக் கிடைத்த தனித்துவமான வெற்றியாகும்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உரித்து (உருமய) திட்டத்தின் முதற்கட்டமாக 10 ஆயிரம் விவசாயிகளுக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று பிற்பகல் ரங்கிரி தம்புலு விளையாட்டரங்கில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இது எனது நாடு, நான் பிறந்த நாடு, எனது பாரம்பரியத்தை உறுதிப்படுத்திய நாடு. இந்நாட்டு மக்கள் தமது காணி உரிமையைப் பெறுவதற்காக நடத்திய போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக இன்று நாம் இங்கு கூடியுள்ளோம். இன்று நாம் ஒரு புரட்சிகர சந்தர்ப்பத்தில் பங்கேற்கிறோம். 20 லட்சம் காணி உரிமைகள் இன்று வழங்கப்படுகின்றன. இந்த புரட்சியை நாட்டு மக்கள் அனுபவித்து வருகின்றனர். இந்த நிலம் உரிமை பெறும்போது, யாருக்கும் அடிபணிய வேண்டியதில்லை. எம்.பி , அதிகாரிகள் பின்னால் சென்று அனுமதி பெற வேண்டிய அவசியம் இல்லை. நிலத்தை விரும்பியபடி அபிவிருத்தி செய்யலாம், அதில் யாரும் அழுத்தம் கொடுக்க முடியாது.

தங்களுக்குக் கிடைத்த இந்த உரிமையை பாதுகாக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். இந்த உரிமை தங்களுக்கு மட்டுமல்ல, தங்கள் குழந்தைகளுக்கும் கிடைக்க வேண்டும். இதை நீங்கள் உரிய வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உலகில் நில உரிமை கோரி பல புரட்சிகள் நடந்துள்ளன. இன்று இந்த நாட்டில் எந்தப் புரட்சியும் இன்றி மக்களுக்கு காணி உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இது சாத்தியமற்றது என்று பலர் நினைத்தார்கள். ஆனால் எங்கள் அரசாங்கம் அந்த முடிவை எடுத்தது.

இது ஒரு வரலாற்று முக்கியத்துவமான தருணமாகும். சிங்கள மன்னராட்சிக் காலத்தில் கூட காணி உறுதிப் பத்திர முறை இருக்கவில்லை. பிரபுக்களுக்கும் நிலச்சுவாந்தர்களுக்கும் பத்திரம் ஊடாக காணி வழங்கப்பட்டது. மற்றவர்களுக்கு விவாசாயத்திற்காக நிலம் வழங்கப்பட்டது. மக்களுக்கு நிரந்தர காணி உறுதிப் பத்திரங்கள் இருக்கவில்லை. தரிசு நிலச் சட்டத்தின் கீழ் இவை அனைத்தும்

04▶
















# மக்களின் காணி உரித்தை உறுதிப்படுத்தியமை அரசாங்கத்தின் தனித்துவமான வெற்றியாகும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெருமிதம்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அரசுக்குச் சொந்தமானவை. சில நிலங்கள் வெள்ளைக்காரர்களுக்கு தோட்டங்களுக்காக வழங்கப்பட்டன. மக்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை.

நமது நாடு தற்போது படிப்படியாக மீண்டு வருகிறது. இந்நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இன்னும் சிலர் கஷ்டப்படுகிறார்கள். எம்மால் முடிந்தளவு இந்த மக்கள் அனைவருக்கும் நிவாரணம் வழங்கினோம். அதற்காக அஸ்வெசும திட்டத்தை செயல்படுத்தினோம். அரச ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தவும் நடவடிக்கை எடுத்தோம். வங்குரோத்து நிலையில் இருந்து இப்போதுதான் மீண்டு வருகின்றோம். மூன்றாவது கட்டமாக இந்த நிரந்தர காணி உரிமைகளை மக்களுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டு இந்த செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்றால், நாட்டின் பொருளாதாரம் வலுப்பெற்றதன் பின்னர் எதிர்காலத்தில் என்ன செய்ய முடியாது என நான் கேட்க விரும்புகின்றேன்.

எதிர்காலத்தில் இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய மேலும் பல சட்டங்களை கொண்டு வர எதிர்பார்க்கின்றோம். அனைவரும் இணைந்து முன்னேறுவோம். விவசாயத்தை நவீனமயமாக்குவதன் மூலம் நாட்டில் மிகப்பெரிய விவசாய புரட்சி ஏற்பட்டு வருகிறது.

நாம் மீண்டும் கடன் வாங்க முடியாது. நாம் மீண்டும் பிச்சைக்காரர்களின் தேசமாக மாற முடியாது. நமது பெருமையை நாம் பாதுகாக்க வேண்டும். இந்தப் பயணத்தில் நாம் அனைவரும் ஒன்றாகச் செல்ல வேண்டும்." – என்றார்.







# இலங்கை மீண்டும் தன்னிறைவடைய விவசாயிகள் பங்களிப்புச் செய்தனர்

## பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவிப்பு



"நாடளாவிய ரீதியில் உணவுப் பற்றாக்குறையால் மக்கள் தவித்துக்கொண்டிருந்த வேளையில் ஜனாதிபதியின் அழைப்பினாலும் தலையீட்டினாலும் இந்த நாட்டை மீண்டும் தன்னிறைவு அடையச் செய்வதற்கு விவசாயிகள் பங்களிப்புச் செய்தனர்."

– இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

உறித்து திட்டத்தின் முதற்கட்டமாக 10 ஆயிரம் விவசாயிகளுக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று பிற்பகல் ரங்கிரி தம்புலு விளையாட்டரங்கில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"மாத்தளை கிளர்ச்சியின் பின்னர் இந்த நாட்டிற்கு வந்த அந்நிய ஆட்சியாளர்கள் எமது நிலங்களை அபகரித்தனர். தன்னிறைவு பெற்ற நமது பொருளாதாரம் சரிந்தது. அதிலிருந்து எழுச்சி பெறும் பயணத்தில் நமது நாட்டின் சுதந்திரப் போராட்ட பூமி முன்னணியில் நின்றது. இத்தகைய சவாலான பாரம்பரியத்தை வென்றெடுக்கும் போரில் தொடங்கிய பாரம்பரியத்தை மீண்டும் 20 லட்சம் பேருக்கு வழங்க இது ஒரு வாய்ப்பாகும்.

அதற்கு ஜனாதிபதியின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஒன்றிணைந்த காணி அமைச்சர் உட்பட அனைத்து அதிகாரிகளும் சிறப்பான பணியை செய்தனர்.

தம்புள்ள நகரம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது. வரலாற்றில் மட்டுமன்றி உலகிலேயே நிகரற்றது எனலாம். தம்புள்ள, சீகிரியா போன்ற மையங்களால் போஷிக்கப்பட்ட இந்த நிலம், இன்று இத்திட்டத்தை ஆரம்பித்ததன் மூலம் எமது பாரம்பரியத்தையும் மண்ணின் பெருமையை நினைவுகூருகிறது.

நாடளாவிய ரீதியில் உணவுப் பற்றாக்குறையால் மக்கள் தவித்துக்கொண்டிருந்த வேளையில் ஜனாதிபதியின் அழைப்பினாலும் தலையீட்டினாலும் இந்த நாட்டை மீண்டும் தன்னிறைவு அடையச் செய்வதற்கு விவசாயிகள் பங்களிப்புச் செய்தனர்.

அரசாங்கம் காணி வழங்கி, அந்த முக்கியமான பணிகளை வலுவாக முன்னெடுப்பீர்கள் என்று எதிர்பார்க்கின்றது. அதை உறுதி செய்வது உங்கள் அனைவரின் பொறுப்பு. இன்று கிடைத்த இந்த உறுதிப் பத்திரங்களை சாதாரணமாக எடுத்துக் கொள்ளாதீர்கள்." – என்றார்.

# கஞ்சா பயிரிடுவதற்கு அமைச்சரவை அனுமதி



ஏற்றுமதி நோக்கங்களுக்காக கஞ்சா பயிரிடுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவினால் அமைச்சரவையில் இந்த பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த நிலையில், அமைச்சரவையின் அனுமதி கிடைத்தமையால் மகிழ்ச்சியடைகின்றேன் என்று டயனா கமகே குறிப்பிட்டுள்ளார்.

# கந்தக்காடு மோதல் சம்பவம்: கைதான 34 பேரும் மறியலில்

பொலனறுவை, வெலிக்கந்தை – கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள 34 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் பொலனறுவை நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது, அவர்களில் 20 பேரை எதிர்வரும் 16ஆம் திகதி வரையிலும், ஏனைய 14 பேரையும் எதிர்வரும் 8ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரண்டு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் இராணுவச் சிப்பாய் ஒருவரும், கைதிகள் 9 பேரும் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வெலிக்கந்தை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக பொலனறுவை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இந்த மோதல் தொடர்பில் 34 கைதிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த தாக்குதல் சம்பவத்தை அடுத்து தலைமறைவாகியுள்ள சந்தேகநபர் ஒருவரைத் தேடும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் தொடர்ந்தும் கைதிகளுக்கிடையில் மோதல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, புனர்வாழ்வு நிலையங்களில் உள்ள கைதிகள் தொடர்ந்தும் வன்முறையில் ஈடுபட்டால் அவர்களைப் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் இருந்து நீக்கி விளக்கமறியலில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெலிக்கந்தை – கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் கைதிகளுக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகள் தொடர்பில் உடனடி அறிக்கை ஒன்றையும் நீதி மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, அதன் பணிப்பாளரிடம் கோரியுள்ளார்.

# இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பு கொண்டு, தாம் வரும் 10ஆம் திகதி நாடு திரும்பி விடுவார் என்றும், அதற்கு பின்னர் 11 ஆம் திகதி இந்தக் கூட்டத்தைக் கூட்டலாமா என்பதை இதுவரை காலமும் பொதுச்செயலாளராக இருந்த மருத்துவர் சத்தியலிங்கம், புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சிறீதரன் எம்.பி. மற்றும் சுமந்திரன் எம். பி. ஆகியோருடன் தொடர்பு கொண்டு ஆலோசித்து நடவடிக்கை எடுக்கும்படியும் பணித்திருந்தார் எனத் தெரிகின்றது.

ஆனால் அவர் குறிப்பிட்ட மூவரில் இருவர் – டாக்டர் சத்தியலிங்கமும் சுமந்திரனும் – முடிந்த செயற்குழுவை மீண்டும் கூட்ட முடியாது என்ற உறுதிப்பாட்டை தெரியப்படுத்தி இருப்பதால், அந்தக் கூட்டத்தை அத்தினத்தில் கூட்டுவது சாத்தியமல்ல என்பது இப்போது தெரிய வந்துள்ளது.

இதற்கிடையில் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி மட்டக்களப்பு மாவட்டத்திற்குத் தரப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதத்தில் கட்சியின் பொதுக்குழுஉறுப்பினர்களிடம்கையெழுத்துப் பெறும் ஒரு முயற்சி மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்த முயற்சிக்குப் போதிய எண்ணிக்கையில் கையெழுத்து ஆதரவு கிட்டுமா, அத்தகைய கையெழுத்துக்கள் மூலம் பொதுச் செயலாளர் பதவி நிலையில் மாற்றங்கள் செய்ய முடியுமா என்பவற்றைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

புதிய தலைவராகத் தெரிவாகி இருக்கும் சிறீதரனுக்கு கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவர் சொன்ன அட்வைஸ் என் காதுகளுக்கும் கிடைத்தது.

“மாவையின் தலைமைப் பதவிக்காலம் முடிந்துவிட்டது. இனியும் அவரின் கதையைக் கேட்டு நீங்களும் மாவையாகி விடாதீர்கள்!” – இதுதான் அவரின் அட்வைஸ்.

எல்லா பக்கங்களையும், தரப்புக்களையும் சமாளிக்க வேண்டும் என்ற நினைப்பில், இழுத்த பக்கம் எல்லாம் சாய்ந்து, இன்னொரு மாவையாகவே உருவாக சிறீதரன் தீவிரமாக முயற்சித்துக் கொண்டிருக்கின்றாரோ என்றுதான் எனக்குத் தோன்றுகின்றது.

\+ \+ \+

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸா தமது கட்சியில் முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்நாயக்கவை சேர்த்துக் கொண்டமையால் மற்றொரு முன்னாள் இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கோபாவேசம் கொண்டு சீறி எழுந்திருக்கின்றார் என்பது தெரிந்ததுதான்.

சஜித்தையும் கட்சியையும் தாக்கும் விதத்தில் சரத் பொன்சேகா கருத்து வெளியிட்டு வருகிறார்.

இப்போது ஐக்கிய மக்கள் சக்தியுடன் கோபித்துக் கொண்டு, தனிக்கட்சி ஆரம்பித்து, மீண்டும் தனி வழி போக சரத் பொன்சேகா தயாராகி வருகின்றார் என்று தென்னிலங்கை ஊடகங்கள் தகவல் வெளியிட்டு இருக்கின்றன. அந்த தகவலில் கூறப்பட்டிருப்பதை வருமாறு:-

ஐக்கிய மக்கள் சக்தியின் துணைத் தலைவரான பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகாவின் தலைமையில் புதிய கட்சி தொடங்கப்பட்டுள்ளது.

அக்கட்சியின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கம் ஜனவரி மூன்றாம் திகதி உருவாக்கப்பட்டது.

இந்த முகநூல் பக்கத்தில் 2024ஆம் ஆண்டிற்கான சரத் பொன்சேகா என்ற பதிவுகள் வெளியாகியுள்ளன.

நாட்டின் முன்னேற்றத்திற்குக் கட்சி பேதமின்றி தேசிய வளர்ச்சிக் கொள்கைகளின்படி நடக்க வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில், முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்நாயக்கவை ஐக்கிய மக்கள் சக்தியில் இணைத்தமைக்கு சரத் பொன்சேகா கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தார்.

அத்துடன், அக்கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் சர்ச்சை நிலை உருவாகியுள்ளது.

தயா ரத்நாயக்கவை கட்சியில் இணைத்துக்கொண்டால்,கோட்டாபயராஜபக்ஷவையும் கட்சியில் இணைத்துக் கொள்ள முடியும் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரத்நாயக்க ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ள நிலையில், அந்தக் கட்சிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இதனால், கட்சி விரைவில் பிளவுபடுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

– இப்படி அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

---

# இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியாவின் இலங்கைக்கான புதிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட இராஜதந்திரியான ஸ்ரீ சந்தோஷ் ஜா வுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான சந்திப்பு எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

இரு நாடுகளுக்கும் இடையே நீண்ட காலமாக நிலவிவரும் சமூக,பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்களுடன் தொடர்பான பல்வேறு விடயங்களை இந்தச் சந்திப்பின்போது இருவரும் பரிமாறிக்கொண்டனர்.

தற்போதைய அரசு கொண்டு வந்துள்ள சட்டவிரோத மற்றும் நியாயமற்ற வரிக் கொள்கை குறித்த விடயங்களை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இந்தியத் தூதுவருக்குத் தெரியப்படுத்தினார். நியாயமற்ற முறையில் அரசு விதித்த பெறுமதி சேர் வரியால் மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் மற்றும் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பில் உழைக்கும் மக்களின் ஊழியர் சேம நிதியங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பாதகமான விளைவுகளின் தாக்கம் குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது இந்தியத் தூதுவருக்குத் தெளிவுபடுத்தினார்.

தற்போதைய அரசு மக்களின் ஜனநாயக உரிமைகளில் ஏற்படுத்தி வரும் தாக்கம் குறித்த விடயங்களையும் இந்தியத் தூதுவரிடம் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

திட்டமிட்ட திகதிகளில் நடத்தப்பட வேண்டிய தேர்தல்கள் வேண்டுமென்றே ஒத்திவைக்கப்பட்டு வருவதான விடயங்கள் குறித்தும் இங்கு எதிர்க்கட்சித் தலைவரால் தெளிவுபடுத்தப்பட்டது.

இதுதவிர இந்த வருடம் தேர்தல் வருடமாக அமைந்திருந்தாலும் தற்போதைய அரசு நிகழ்நிலை காப்பு என்ற சட்டத்தை நிறைவேற்றி, மக்களின் கருத்துக்களைத் தெரிவிக்கும் உரிமை, தகவல் அறியும் உரிமை என்பவற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. சமூக ஊடக வலையமைப்புகளை முடக்க மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்த இந்தச் சட்டத்தால் முடியும். தேர்தல் வருடத்தில் இவ்வாறான சட்டமூலத்தைக் கொண்டு வருவதன் மூலம் மக்களின் ஜனநாயக உரிமைகளில் தேவையற்ற தலையீடுகள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதன்போது மேலும் சுட்டிக் காட்டினார்.

இந்தச் சந்திப்பில் இந்திய பிரதித் தூதுவர் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார, நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன, ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி தேர்தல் செயற்பாட்டு பிரதானி சட்டத்தரணி சுஜீவ சேனசிங்க, எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி திசத் விஜயகுணவர்தன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

---

# தமிழ்க் கட்சிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

டில்லியில் இன்னும் சில வாரங்களில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது என்றும் மேற்படி செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் அக்கட்சிகளின் முக்கியஸ்தர்கள் பங்கேற்பார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

---

# அஜித் டோவலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடையிலான இரு தரப்பு உறவுகள் பற்றியும், பிராந்தியப் பாதுகாப்பு குறித்தும் ஆழமாகக் கலந்துரையாடினோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் தனது எக்ஸ் சமூக வலைத்தளப் பக்கத்திலேயே இந்தத் தகவலைப் பதிவிட்டுள்ளார்.

மேற்படி சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் விஜித ஹேரத் எம்.பியும் கலந்துகொண்டிருந்தார்.



# எமக்குள்ள ஜனநாயக வெளிகளைப் பாதுகாக்க கூட்டுணர்வோடு துணிச்சலுடன் இயங்குவோம்!

## பொலிஸாரின் அராஜகப் போக்கைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிக்கை

(ந.லோகதயாளன்)

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் ஜனநாயக ரீதியிலான போராட்டத்தில் ஈடுபட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மீதும் பொதுமக்கள் மீதும் பொலீஸாரினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அச் சங்கம் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் –

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அநீதிகளையும், உரிமை மீறல்களையும், வடக்குக் கிழக்கிலே இடம்பெறும் சிங்கள, பௌத்தமயமாக்கலையும் கண்டிக்கும் வகையிலும், தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை முன்னிறுத்தியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும், வடக்கைச் சேர்ந்த பல சமூக அமைப்புக்களும் இணைந்து இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்தன்று கிளிநொச்சியிலே அமைதி வழிப் போராட்டம் ஒன்றிலே ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்திலே ஈடுபட்ட மாணவர்கள் மீது பொலிஸார் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டனர். இந்தத் தாக்குதல்களிலே நீர்த்தாரைகளும், கண்ணீர்ப் புகைக் குண்டுகளும் பயன்படுத்தப்பட்டன. மாணவர்களை இழுத்தும், தள்ளியும், நிலத்தில் வீழ்த்தியும் பொலிஸார் மிகவும் மோசமான முறையிலே வன்முறையிலே ஈடுபட்டனர். போராட்டத்திலே பங்குபற்றிய மாணவர்களிலே சிலர் கைது செய்யப்பட்டனர்.

அநீதிகளை எதிர்த்தும், உரிமைகளைக் கோரியும் பல்கலைக்கழக மாணவர்களும், பொது மக்களும் மேற்கொண்ட போராட்டத்தினைப் பொலிஸார் வன்முறை மூலம் நசுக்க முற்பட்ட செயலினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. நேற்று மாணவர்கள் மீது பிரயோகிக்கப்பட்ட வன்முறை இலங்கையில் சுதந்திர தினத்தன்று கூட அங்கு வாழும் தமிழ் மக்களுக்குச் சுதந்திரமாக ஒன்று கூடவும், தமது உரிமைகளை வலியுறுத்திப் போராடவும் சுதந்திரம் இல்லை என்பதனை உலகுக்கு வெளிக்காட்டியது.

30 வருட ஆயுதப் போராட்டம் முடிவுற்ற பின்னர், தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைகளுக்காகவும், தம் மீது தொடரும் அடக்குமுறைகளுக்கு எதிராகவும் அமைதி வழியில் போராடி வருகின்றனர். காணி அபகரிப்பு, இராணுவ மயமாக்கம், சிங்கள பௌத்த மயமாக்கல் என்பவற்றுக்கு எதிராகவும், அரசியற் கைதிகளின் விடுதலை, காணமால் ஆக்கப்பட்டோருக்கான நீதி போன்ற விடயங்களிற்காகவும் தமிழ் மக்களின் போராட்டங்கள் வடக்குக் கிழக்கிலே தொடர்ந்த வண்ணம் உள்ளன. இந்தப் பிரச்சினைகளை ஜனநாயக ரீதியில் தீர்ப்பதைத் தவிர்த்து, தனது பெரும்பான்மைவாத வன்முறையைத் தமிழ் மக்கள் மீது அரசு தொடர்ந்தும் ஏவி வருகிறது.

போராட்டங்களை நசுக்குவதன் மூலம் தன்னுடைய இருப்பைத் தக்கவைக்க முடியும் என இந்த அரசாங்கம் கருதுகிறது. மக்களின் கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம், அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பதற்கான சுதந்திரம் என்பவற்றைச் சட்டங்கள் மூலமும், கொடூர வன்முறை மூலமும் அரசு பறித்து வருகிறது. இந்தச் செயன்முறைகளினதும், சிங்கள பௌத்தப் பெரும்பான்மைவாதத்தினதும் ஒரு வடிவமே போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறை ஆகும்.

சுதந்திரத்தின் அர்த்தத்தைக் கேலிக் கூத்தாக்கும் அரசாங்கத்தின் நேற்றைய வன்முறைக்கு எதிராக நாட்டு மக்கள் அனைவரும் இன, மத, மொழி, பிராந்திய வேறுபாடின்றிக் குரல் கொடுக்க வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைகக்கழக ஆசிரியர் சங்கம் வலியுறுத்துகிறது. இனப் பிரச்சினை, நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி என்பவற்றுக்கு நிலைத்திருக்கக் கூடிய, நீதியான தீர்வுகளைக் காண்பதே அரசின் மீது மக்களுக்கு நம்பிக்கையை உருவாக்கும். அதனை விடுத்து வன்முறையிலாம், ஒடுக்கும் சட்டங்களினாலும் மக்களின் எதிர்ப்புக் குரலை நசுக்கலாம் என்ற அரசின் எண்ணம் ஒரு போதும் நிறைவேறாது. நெருக்கடி ஒன்றை நாம் சந்தித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில், நாம் ஒன்றுபட்டு எம்மத்தியில் இருக்கும் ஜனநாயக வெளிகளைப் பாதுகாக்க முன்வர வேண்டும். இந்த வெளிகளில் நாம் பொதுமக்களாகக் கூட்டுணர்வுடன் துணிச்சலுடன் இயங்குவதன் மூலம் மாத்திரமே, ஜனநாயகத்தைப் பலப்படுத்தி, அரசின் அநீதி மிக்க நடவடிக்கைகளைத் தோற்கடிக்கலாம் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நம்புகிறது. – என அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இந்தியாவைப் புரிதல்

இலங்கை தொடர்பாக இந்திய அணுகுமுறை - இராஜதந்திர ஊடாட்டம் - பெரிதும் மாறிக் கொண்டிருக்கின்றது. அந்தப் புறநிலை உண்மைகளை புரிந்து கொள்ளாமல், தமிழ் தலைமைகள் ஏதோ பழைய நினைவில் - பகல் கனவில் - உழல்வதாகத் தெரிகின்றது.

இதற்காக இந்தியாவைக் குறை சொல்வதில் பயனில்லை. மாறிவரும் உலகப்போக்குகளுக் கேற்ப தன்னை உறுதிப்படுத்திக் கொள்வதும், தனது நலனை வலுப்படுத்திக் கொள்வதும் இறைமையுள்ள ஒரு தேசம் என்ற முறையில் அதன் கடப்பாடு. தவிர்க்க முடியாத பொறுப்பு.

பல்வேறு இனங்களை - பல்வேறு மொழிகளை - பல்வேறு கலாச்சாரங்களை - கொண்ட பல்வகை மாநிலங்களின் கூட்டாட்சியே இந்திய உபகண்டம். தன் ஐக்கியம், தனித்துவம், பாதுகாப்பு, நலன், அபிவிருத்தி, பொருளாதாரம் போன்றவையே அதற்குப் பிரதானம். மற்றெல்லாம் அதற்குப் பின்னரே.

நாற்பது, நாற்பத்தியைந்து ஆண்டுகளுக்கு முன்னர் தென்கோடி மூலையில் உள்ள அயல் தேசத்தின் ஒரு சிறுபான்மைக் குழுமமான தமிழர்களின் தனித்துவ உரிமைகளுக்காக குரல் எழுப்பிய நாடு என்பதற்காக, தன் நலனைத் துறந்து, ஈழத் தமிழரைக் கட்டிப்பிடித்துக் கொண்டு நிற்க முடியாது என்ற யதார்த்த நிலைமை அகன்ற பாரத தேசத்திற்கு.

மாறிவரும் உலகில், மாறிவரும் சர்வதேச ஊடாட்டங்கள், அணுகுமுறைகள், அயலுறவுகள் ஆகியவற்றிற்கேற்ப தனது கொள்கைக் கோட்பாடுகளையும் இந்தியா மாற்றி வருகின்றது. அது அதன் தேவையைப் பொறுத்தது.

அந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல், இன்னமும் இந்தியா எங்களைக் கைவிட்டுவிடாது என்று இந்தியப் புகழ் பாடிக்கொண்டு மதி இழந்தவர்களாக, ஈழத் தமிழர்களும் அவர்களின் தலைவர்களும் நடப்பதில் அர்த்தமில்லை. இந்தியாவைப் பொறுத்தவரை இந்த விடயம் - 'water under the bridge' என்றாகி விட்டது.

இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி கால அரசியல் நிலைமைவேறு. இப்போதுமோடிஅரசின்அணுகுமுறை, சர்வதேச ஊடாட்டங்கள், அயலுறவுகள் வேறு. பல அம்சங்களில் அவை தலைகீழானவை. ஒன்றுக்கொன்று முரணானவையும் கூட.

'அயல் தேசத்துக்கு முன்னுரிமை' என்ற இந்தியப் பிரதமர் மோடியின் கடந்த பத்து வருட அணுகுமுறை இந்திய தேச நலனில் - அனுபவத்தில் - பல எதிர்பாராத அதிர்ச்சிகளைத் தந்திருப்பது மறுக்க முடியாத உண்மை.

பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளுடன் இந்திய உறவைப் பற்றிக் குறிப்பிடத் தேவையில்லை. அது அப்பட்டமாகத் தெரியும் விடயம். ஆப்கானிஸ்தான், மியான்மார் போன்றவற்றுடன் மிக சாதகமான நல்லுறவு இருப்பதாகக் கூற முடியாது. பூட்டான், நேபாளம் போன்றவை சிறிய பிரதேசங்கள் என்றாலும் அவற்றுடனான உறவுகளும் சாண் ஏற முழம் சறுக்கும் நிலைமையிலேயே உள்ளன. தான் 53 ஆண்டுகளுக்கு முன் உருவாக்கிக் கொடுத்த வங்காள தேசத்துடன் கூட அதற்கான நன்றிய உணர்வுடன் கூடிய உறவை இந்தியா உறுதியாகப் பெறவில்லை. கடல் வழியில் அயல் தேசமான மாலைதீவு பாரதத்துடன் முரண்பட்டுக் கொண்டு மற்றப் பக்கம் போய்விட்டது.

போதாக்குறைக்கு இந்துத்துவா சக்திகளின் ஆட்சியில் இருக்கும் பாரதம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், மாலைதீவு என்று அயலில் பரந்திருக்கும் இஸ்லாமிய நாடுகளின் வைரித்தனத்தையும் எதிர் கொண்டு நிற்கின்றது.

இந்தப் பின்புலத்தில் -

சமுத்திர எல்லை கொண்ட அயல் நாடான மாலைதீவு முழுமையாக சீன வலையில் விழுந்துவிட்டது.

கடலால்பிரிக்கப்பட்ட மற்றஅயல்நாடான இலங்கை - பாரதத்துடன் மிக நெருக்கமான பக்கத்தில் உள்ள தேசம். மாலைதீவு போல 2,000 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள நாடு அல்ல. 20 மைல் தொலைவில் உள்ள பக்கத்து நாடு.

சீனாவின் கடன் பொறியில் சிக்கியிருக்கும் இலங்கையும் அந்த அழுத்தத்தாலும், இயல்பாகவே உள்ள பௌத்த மார்க்க ஈடுபாட்டாலும் சீனா பக்கம் சாய்ந்து விடும் வாய்ப்பு அதிகம் இருப்பதைப் புரிந்து கொண்டுள்ள புதுடெல்லி கொழும்பை மடக்குவதற்கு - வளைத்துப் போடுவதற்கு - எந்த எல்லை வரையும் செல்லவும் தயாராக இருக்கின்றது - ஈழத் தமிழர்களின் நலனைக் கண்டே கொள்ளாமல் கைவிட்டு அசண்டையீனமாக நடப்பது வரையில்.

இந்தியாவின் தொப்புள் கொடி உறவுகள் என்று தங்களைப் பெருமையுடன் கூறிக் கொண்டு, இந்தியாவுக்குப் பந்தம் பிடித்துக் கொண்டிருக்கும் தமிழ் தலைவர்களைச் சந்திப்பதற்கு புதுடெல்லிக்கு அழைப்பார் எனக் கூறிய மோடி, அதை மறந்து ஐந்து ஆண்டுகளாகிவிட்டன.

இந்திய அமைதிப்படையின் வருகையை ஒரு விடயமாகக் காட்டி, அதற்கு எதிரான தாகத் தமது ஆயுதக் கிளர்ச்சியை நியாயப் படுத்திய ஜே.வி.பிக்கு - சீனச் சார்புக் கட்சிக்கு - இப்போது வெற்றிலை வைத்து, இராஜதந்திர வரவேற்புக் கொடுத்திருக்கும் புதுடில்லியின் இந்த போக்கு, அதைப் பொறுத்தவர போக்கிலித்தனம் அல்ல. அவர்களின் தேச நலன் நோக்கிய இராஜதந்திரம்.

இந்தஇராஜதந்திரங்களைப்புரிந்துகொள்ளாமல், இந்தியா உதவும் என்று இன்னும் நம்பிக் கொண்டு, பழைய பல்லவியைப் பாடி மாரடித்துக் கொண்டிருப்பதை விடுத்து, சர்வதேச உறவில் புதிய கதவுகளை தமிழர்களாகிய நாம் தட்ட வேண்டும். புதிய பாதைகளைத் தேட வேண்டும். அதற்கான காலம் வந்து விட்டது.

இந்தியாவிடம் கையேந்தும் நம் தலைவர்களுக்கு இது நன்கு புரியும். ஆனாலும் 'நாவிழந்தோர்' அது பற்றி எதுவும் கூற முடியாது என்பது தான் அவர்கள் இக்கட்டு.

இலங்கைத் தீவில் உண்மை நண்பன் யார், தோழனாகத் தோளில் கைபோடும் கபட வேடதாரி யார் என்பதைப் பட்டுத் தெளிந்து உணர பாரதத்தை விட்டு விடுவதே பொருத்தமானது.

# கச்சதீவை இலங்கையிடமிருந்து மீட்கவேண்டும்: மக்களவையில் ரவீந்திரநாத் எம்.பி. கோரிக்கை



கச்சதீவை இலங்கையிடமிருந்து மீட்க வேண்டும் என தேனி தொகுதி எம்.பியான ஓ.பி.எஸ்.பி.ரவீந்திரநாத் மத்திய அரசிடம் கோரிக்கை முன்வைத்தார்.

மக்களவையில் நேற்று இடம்பெற்ற இடைக்கால வரவு செலவு திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழகத்தின் வரலாற்றை எடுத்துக் கொண்டால் இப்போது நமது ராமர் கோயில் அயோத்தியில் 500 ஆண்டுகளுக்குப் பிறகு கட்டப்பட்டுள்ளது. இதை சீரும் சிறப்புமாக இந்தியாவின் உடைய ஒவ்வொரு குடிமகனுடைய கனவை நிறைவேற்றி இருக்கிறார் பிரதமர் மோடி . ராமர் கோயில் திறப்பு விழாவுக்கு முன்பாக தமிழகத்துக்கு சென்ற பிரதமர், ஸ்ரீரங்கம் கோயில், தென்கோடியின் ராமேஸ்வரம் கோயிலில் வழிபட்டு வந்தார். 17 ஆம் நூற்றாண்டில், ராமநாதபுரம் சமஸ்தானத்துக்கு சொந்தமாக அங்குள்ள கச்சதீவு இருந்தது.

மக்கள் வசிக்காத இந்த பகுதி, ராமநாதபுரம் சேதுபதி மன்னருக்கு சொந்தமாக இருந்தது. அந்த சேதுபதி மன்னர் வெளியிட்ட செப்பு பட்டையில் கச்சதீவையும் அதையும் தாண்டி இலங்கை தலைமன்னார் வரைக்கும் நமது ராமநாதபுரம் சமஸ்தானத்துக்கு சொந்தம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 1822 ஆம் ஆண்டில் ஆங்கிலேய கிழக்கிந்திய கொம்பெனி, ராமநாதபுரம் சமஸ்தானத்துடன் ஒரு ஒப்பந்தம் மேற்கொண்டது. அதன்படி கச்சதீவு உட்பட ராமநாதபுரம் சமாதானத்துக்குட்பட்ட நிலப்பரப்பை ஆங்கிலேயர்கள் பயன்படுத்திக் கொள்ள உரிமை வழங்கப்பட்டது.

ஆக, வரலாற்றை எடுத்துப் பார்த்தால் கச்சதீவு என்பது இந்தியாவின் ஒரு பகுதியாகவும், தமிழகத்தின் ஒரு பகுதியாகவும் இருந்தது. ஆனால் இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது அந்த கச்சதீவை இலங்கை பிரதமர் பண்டாரநாயக்காவிடம் கொடுத்துவிட்டார். அதை இந்த நாடாளுமன்ற அவையில் விவாதிக்காமாலே, கச்சதீவைப் பரிசாக இலங்கைக்கு கொடுத்து விட்டார். இன்று, ஜம்மு-காஷ்மீரில் மக்கள் நன்றாக வாழ சட்டத்தை இயற்றுகிறோம். அதேசமயம், எதிர்க்கட்சியினரால் நாம் இழந்த அந்த கச்சதீவை மீட்டெடுக்க இது வரையும் எவரும் போராடவில்லை என்பது வருத்தமான செயல். ஆனால் பிரதமருக்கு நான் ஒரு வேண்டுகோள் வைக்கின்றேன்.

இழந்த கச்சதீவை மீண்டும் இந்தியாவுக்கும், தமிழகத்துக்கும் பெற்றுத் தர வேண்டும். ” – என்றார்.



# தமிழக மீனவர்கள் கைது தொடர்வது ஏன்? மத்திய அரசுக்கு உயர் நீதிமன்றம் கேள்வி

கச்சதீவு அருகில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வது தொடர் நிகழ்வாக இருப்பதைத் தடுக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஏன் எடுக்கப்படவில்லை என மத்திய அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் மீனவர் பாதுகாப்பு அமைப்பின் தலைவர் பீட்டர் ராயன் தாக்கல் செய்த மனுவில்,

‘கச்சதீவு பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ராமநாதபுரத்தைச் சேர்ந்த 6 மீனவர்களை இலங்கை கடற்படையினர் ஜனவரி 22 ஆம் திகதி கைது செய்துள்ளனர். எனவே, இலங்கை கடற்படையால், கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க, மத்திய – மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும்’ என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கு, தலைமை நீதிபதி சஞ்சய் கங்காபுர்வாலா மற்றும் நீதிபதி பரத சக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் மவுரியா,

“கச்சதீவு ஒப்பந்தத்தை மீறி இலங்கை அரசு செயல்படுகிறது. கைது செய்யப்பட்ட மீனவர்களை மீட்க தூதரக அளவில் நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும். இன்றும் 23 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த பிரச்சினை குறித்து தீர்வு காண மத்திய – மாநில அரசுகள் இணைந்த கூட்டுக்குழுவை அமைக்க வேண்டும்.” என்று வாதிட்டார்.

தமிழக அரசுத் தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன்,

“கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்திய அரசுக்கு, தமிழக முதல்வர் கடிதம் அனுப்பியிருக்கிறார். கைது செய்யப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினருக்கு ஒரு நாளைக்கு 250 ரூபா உதவித் தொகை வழங்கப்படுகிறது.” என்று தெரிவித்தார்.

மத்திய அரசுத் தரப்பில் ஆஜரான உதவி சொலிசிட்டர் ஜெனரல் ராஜேஷ் விவேகானந்தன்,

“இந்த விவகாரத்தில் தூதரக அளவில் நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே, இந்த வழக்கு தொடர்பாக விளக்கமளிக்க கால அவகாசம் வேண்டும்” என கோரினார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள்,

“மீனவர்கள் கைது நடவடிக்கை என்பது தொடர் நிகழ்வாக இருக்கிறது. இதை தடுக்க ஏன் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை? ஏன் இந்த நிகழ்வுகள் தொடர்ந்து நிகழ்கிறது?” என கேள்வி எழுப்பினர். பின்னர், இந்த வழக்கு தொடர்பாக மத்திய – மாநில அரசுகள் விளக்கமளிக்க உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை மார்ச் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.




# கனடாவின் கரையோரங்களில் பனிப்புயல் எச்சரிக்கை விடுப்பு

கனடாவின் கரையோர மாகாணங்களில் சீரற்ற கால நிலை நிலவி வருவதால் பனிப்புயல் நிலைமை குறித்து கனேடிய சுற்றாடல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக நோவா ஸ்கோஷியாவில் மாகாணம் முழுவதிலும் கடுமையான பனிப்பொழிவு நிலைமை பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், சில பகுதியில் 20 முதல் 40 சென்றி மீட்டர் வரையில் பனிப்பொழிவு நிலவும் என கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பிரின்ஸ் ஒப் எட்வர்ட் பிராந்தியத்திலும் கடுமையான பனிப்பொழிவு தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.பனிப்பொழிவு காரணமாக விளையாட்டுப் போட்டிகள் உள்ளிட்ட பல நிகழ்வுகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. பல பிராந்தியங்களில் மின்சாரம் தடைப்பட்டுள்ளதுடன், போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# செனகலில் ஜனாதிபதி தேர்தல் ஒத்திவைப்பு எதிர்க் கட்சி ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம்

செனகலில் ஜனாதிபதித் தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், தேர்தல் ஒத்திவைக்கப்படுவதாக அந்த நாட்டின் ஜனாதிபதி மேக்கி சவுல் கடந்த சனிக்கிழமை அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பினையடுத்து அந்த நாட்டில் எதிர்க் கட்சிகளின் ஆதரவாளர்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

போராட்டக்காரர்களை கட்டுப்படுத்த கண்ணீர் புகை குண்டுகளை பிரயோகித்த பொலிஸார், பலரை கைது செய்துள்ளனர் எனவும் வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை கைது செய்யப்பட்டவர்களில் முன்னாள் பிரதமர் அமினாதா டூரேவும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரும் அடங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.






# ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் தேர்வு: தெற்கு கரோலினாவில் பைடன் வெற்றி

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில், ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளரை தேர்வு செய்வதற்காக தெற்கு கரோலினா மாநிலத்தில் தேர்தல் நடைபெற்றுள்ளது.

இந்த தேர்தலில் தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பெரும்பான்மையான வாக்குகளுடன் வெற்றி பெற்றுள்ளார்.

ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை தேர்வு செய்வதற்கான முதல் தேர்தல் தெற்கு கரோலினாவில் நடைபெற்றது.

ஜோ பைடனை எதிர்த்து போட்டியிட்ட மரியான் வில்லியம்சனும், டீன் பிலிப்ஸ/ம் தலா 2,000 வாக்குகளை மட்டுமே பெற்றார். ஜோ பைடன் ஒரு லட்சத்து 26 ஆயிரம் வாக்குகளை பெற்று, 96 சதவீத வாக்குகளை தன் வசமாக்கியுள்ளார்.

81 வயதான ஜோ பைடனின் செல்வாக்கு சரிந்துவருவதாக கருத்து கணிப்புகள் வெளியாகி வந்த நிலையில், இவ்வாறு அதிகளவான வாக்குகளுடன் அவர் வெற்றிபெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.






# காரைநகர் இந்துக் கல்லூரியில் பொன்னகவைக் கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம் – காரைநகர் இந்துக்கல்லூரியில் பொன்னகவைக் கட்டட திறப்பு விழா நேற்று இடம்பெற்றது.

1973 ஆம் ஆண்டு பிறந்து, 1989 இல் க.பொ.த. சாதாரண பரீட்சை எழுதிய – 50 வயதைப் பூர்த்தி செய்த – பழைய மாணவர்களான பொன்னகவை அணியினரால் கல்லூரியில் கட்டப்பட்ட இரண்டு புதிய வகுப்பறை கட்டடமே நேற்றுத் திறக்கப்பட்டது.

70 இலட்சம் ரூபா செலவில் ஐந்து மாத காலப்பகுதிக்குள் இந்த வகுப்பறை முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

கல்லூரியின் அதிபர் அ.ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழா நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்டஸ், முன்னாள் கல்லூரி அதிபர் பண்டிதர் மு.சு. வேலாயுதப்பிள்ளை உள்ளிட்ட சிலர் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

பாடசாலையில் இலங்கை வங்கி மாணவர் சேமிப்புக் கிளையும் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.







# பிரம்மகுமாரிகள் இராஜ யோக நிலைய ஏற்பாட்டில் ஜோதிர்லிங்க கண்காட்சிக்கூடம் அங்குரார்ப்பணம்!

## கொக்கட்டிச்சோலை அரசடித்தீவில் நிகழ்வு

(பழுவூரான்)

பிரம்மகுமாரிகள் இராஜ யோக நிலையத்தின் ஏற்பாட்டில், கொக்கட்டிச்சோலை அரசடித்தீவு பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலைய வளாகத்தில் சிவலிங்கம், நினைவுக்கல், ஜோதிர்லிங்க கண்காட்சிக்கூடம், படவிளக்க கண்காட்சிக் கூடம், முரளி மண்டபம் ஆகியவற்றை பிரம்மகுமார் தெய்வீக சகோதரர் சார்லி, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோர் இணைந்து நேற்றுத் திங்கட்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர் .

கொக்கட்டிச்சோலை அரசடித்தீவு முகப்பு வாயிலிலிருந்து நாதஸ்வர மேள வாத்தியத்துடன், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், தெய்வீக சகோதரர் சார்லி ஆகியோரை வரவேற்றமையுடன் இந்நிகழ்வு ஆரம்பமானது.

சகோதரர் கணேஷ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வின் சிறப்பம்சமாக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பிரம்மகுமார் தெய்வீக சகோதரர் சார்லியை பொன்னாடை போர்த்தி கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.








# யாழ். சிறைச்சாலை வளாகத்தில் நடைபெற்ற இரத்த தான முகாம்





(த.சுபேசன்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்ப்பாண கிளை ஆகியவற்றுடன் இணைந்து கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலையின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட இரத்ததான முகாம் நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் சிறைச்சாலை வளாகத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.இந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற இரத்ததான நிகழ்வில் அறுபதுக்கும் மேற்பட்ட உத்தியோகத்தரகள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# சனத் நிஷாந்தவின் வாகன சாரதி பிணையில் செல்வதற்கு அனுமதி

மறைந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் வாகன சாரதி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று வெலிசறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

இதன்போது, அவரை 5 லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதிவான் அனுமதி வழங்கியுள்ளார்.

கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக வீதியில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பயணித்த கெப் ரக வாகனம், கொள்கலன் பாரவூர்தி ஒன்றுடன் மோதி அண்மையில் விபத்துக்குள்ளானது.



இதன்போது, காயமடைந்த முன்னாள் அமைச்சர் சனத் நிஷாந்தவும், அவரது பாதுகாப்பு பணியில் இருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் உயிரிழந்தனர்.

இதனையடுத்து, முன்னாள் அமைச்சர் பயணித்த வாகனத்தை செலுத்திய, சாரதி கைது செய்யப்பட்டார். பின்னர் அவர்நீதிமன்றஉத்தரவுக்கமையவிளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.




# கொக்குவில் இந்து தொழில்நுட்ப பீடத்தை கல்வி அமைச்சர் நேற்றுத் திறந்துவைத்தார்

யாழ்ப்பாணம் – கொக்குவில் இந்துக் கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப பீடம் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவினால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

கல்லூரியின் பதில் அதிபர் கே.குமணன் தலைமையில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற இந்த திறப்பு விழா நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்டஸ், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கடந்த 2021ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்ட குறித்த தொழில்நுட்ப ஆய்வுகூடம் மூன்று மாடிகளை கொண்டதாக 76 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
















# ஹரக் கட்டா வழக்கின் பிரதிவாதிகளுக்கு உயர் நீதிமன்றம் மீண்டும் அழைப்பாணை





பாரியளவான போதைப்பொருள் வர்த்தகரான ஹரக் கட்டா எனப்படும் நதுன் சிந்தக்க விக்ரமரட்னவை தடுத்து வைப்பதற்காக வெளியிடப்பட்டுள்ள 4 ஆவது தடுப்பு காவல் உத்தரவை வலுவிழக்க செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் பிரதிவாதிகளுக்கு மீண்டும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரியந்த ஜயவர்தன, குமுதினி விக்ரமசிங்க மற்றும் அர்ஜுன் ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய ஆயத்தின் முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டது.

இதன்போது, மனுவின் பிரதிவாதிகளான குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட தரப்பினரை உடனடியாக விளக்கமளிக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.



# கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கத்தின் வருடாந்தக் கிரிக்கெட் போட்டித் தொடர்

## சம்பியன் ஆனது கொழும்பு றோயல் அணி





கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கத்தினால் நடாத்தப்படும் வருடாந்த சிநேகபூர்வ மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி இரண்டாவது தடவையாகவும் “கோட்டே அங்கம்பிட்டிய“ மைதானத்தில் கடந்த சனிக்கிழமையன்று நடைபெற்றது.

இந்தக் கிரிக்கெட் போட்டியில் கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கத்தின் அங்கத்தவர்கள் அடங்கிய 8 அணிகள் போட்டியிட்டன.


8அணிகளுக்குஇடையிலானஆரம்ப சுற்று மற்றும் அரையிறுதிப் போட்டிகளின் பின்னர் கொழும்பு கிங்ஸ் அணியும், கொழும்பு றோயல் அணியும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன. இறுதிப் போட்டியில் கொழும்பு கிங்ஸ் அணியை வீழ்த்தி கொழும்பு றோயல் அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

சிறந்த துடுப்பாட்ட வீரராக கொழும்பு ரைடர் அணியின் பிரதீப் விக்ரமசிங்கவும், சிறந்த பந்து வீச்சாளராக கொழும்பு றோயல் அணியின் அமல் கால்லகேயும் கிண்ணத்தை வென்றனர்.

போட்டித் தொடரின் சிறந்த வீரராக கொழும்பு றோயல் அணியின் லங்காடி ஜெயவர்த்தனே தெரிவானார்.

இந்த நிகழ்வில் சிறப்பதிதிகளாக பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ மற்றும் அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், ஊடகவியலாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் உட்பட பெருந்திரளான மக்களின் பங்குபற்றலுடன் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

# மட்டு. தமிழரசுப் பிரமுகர்களுடன் இந்திய துணைத் தூதுவர் பேச்சு



நேற்று முன்தினம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த இந்திய துணை உயர்ஸ்தானிகர் டாக்டர் சத்யஞ்சல் பாண்டே அங்கு தமிழரசுக் கட்சிப் பிரமுகர்களை தனியார் விடுதி ஒன்றில் சந்தித்துப் பேசினார்.

இதில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இராசமாணிக்கம் சாணக்கியன், த.கலையரசன், முன்னாள் மாநகர முதல்வர் தி.சரவணபவன் மற்றும் மட்டக்களப்பு தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போது வடக்கு, கிழக்கில் – குறிப்பாக கிழக்கில் – இந்திய அரசினால் மேற்கொள்ளப்படஇருக்கும் அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார திட்டங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது. அத்துடன் சமகால அரசில் சம்பந்தமாகவும் எமக்கு தீரா பிரச்சினையாகவுள்ள மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்ளின் பிரச்சினை தொடர்பிலும் கலந்துரையாடல் அமைந்திருந்தது.

# நோயாளியின் நிலையில் உள்ள நாட்டிற்கு ரணில் விக்கிரமசிங்கவே சிறந்த மருத்துவர்

## அமைச்சர் ஹரீன் பெர்ணான்டோ கூறுகிறார்



”உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளியின் நிலையில் உள்ள நாட்டிற்கு ரணில் விக்கிரமசிங்கவே சிறந்த மருத்துவர்.”

– இவ்வாறு அமைச்சர் ஹரீன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

“ஜனாதிபதி தேர்தல் இந்த வருடம் ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் நடைபெறவேண்டும். 14 ஆம் திகதிக்குள் புதிய ஜனாதிபதி பதவியேற்கவேண்டும். ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் போட்டியிடுவார்.

கடந்த முறை தேர்தலில் மூன்று வீதம் மாத்திரம் பெற்ற கட்சி இம்முறை மேலும் 47 வீதம் பெறவேண்டும். இது ஒருகனவு. அவர்கள் அந்த கனவில் திளைத்திருப்பதற்கு அனுமதிப்பது சிறந்த விடயம். ஆனால் கனவுகள் ஒருபோதும் நிஜமாவதில்லை.

வங்குரோத்து நிலையில் காணப்பட்ட தேசத்திற்கு குறுகிய காலத்தில் உயிர் கொடுத்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதால் தேசத்தை கட்டியெழுப்புவதற்கு அவருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்கவேண்டும்.

எங்கள் நாடு தீவிரகிசிச்சை பிரிவிலிருந்து வாட்டிற்கு அனுப்பப்பட்ட நோயாளியின் நிலையில் காணப்படுகின்றது. மீண்டும் நோயாளியை தீவிரகிசிச்சை பிரிவிற்கு அனுப்பிக் கொலை செய்யப்போகின்றார்களா என்பதை மக்களே தீர்மானிக்கவேண்டும்.

உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளியின் நிலையில் உள்ள நாட்டிற்கு ரணில் விக்கிரமசிங்கவே சிறந்த மருத்துவர். முழு உலகமும் இதனை ஏற்றுக் கொள்கின்றது.” – என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.02.2024




இன்று நீங்கள் தேவைகளை அறிந்து நடந்து கொள்வீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். உங்களின் சிறிய திட்டம் பெரிய வெற்றிக்கு வழி காட்டும்.

உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள். உங்களிடம் இன்று ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும்.

உங்கள் துணையுடன் தரமான நேரங்களை செலவழிப்பீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலை காணப்படும். இன்று பயனுள்ள சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது. இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று உங்கள் விருப்பங்களை மேம்படுத்திக் கொள்வீர்கள். வாய்ப்புகள் கிடைக்கும். அதை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்வீர்கள்.

பணியில் உங்கள் செயல்திறனை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமைகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த முயல்வீர்கள்.

இன்று சுதந்திரமான நிதிநிலை காணப்படும். இன்று வளமான நாளாக அமையும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது. இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று நீங்கள் பதற்றம் நிறைந்து காணப்படுவீர்கள். இது உங்கள் பேச்சில் வெளிப்படும். பிரார்த்தனை மற்றும் மந்திர ஜெபங்கள் மன ஆறுதலை அளிக்கும்.

பணியில் கூடுதல்பொறுப்புகள் சுமக்க நேரும். வேலை சம்பந்தமான பயணம் காணப்படும். இன்று உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி பணிகளைக் கையாள வேண்டும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க அகந்தைப் போக்கை கவனமாகக் கையாள வேண்டும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகமாக இருக்கும். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

கணுக்கால் மற்றும் தோள்களில் வலி காணப்படலாம். முறையான உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.




நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும். உங்கள் மதிப்பு மிக்க பொருளை இழக்க நேரலாம். கவனமாக இருக்கவும். இன்று திருப்தியான மன நிலை இருக்காது. அது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. கவனமுடன் உங்கள் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் பதற்ற உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் வாக்குவாதம் எழும். இந்த நடத்தையை கைவிடுங்கள்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். சிறப்பாக திட்டமிடுவதும் அதனை செயலாற்றுவதும் இன்று வெற்றியை பெற்றுத் தரும்.

உங்கள் தாயின் உடல் நலம் பற்றிய கவலை காணப்படும்.




இன்று அமைதி மற்றும் செழிப்பு காணப்படும் அனுகூலமான நாள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளுக்கு பாராட்டு கிடைக்கும். சக பணியாளர்கள் ஒத்துழைப்பார்கள்.

உங்கள் தொடர்பாடல் மூலம் உங்கள் துணையிடம் நல்லுறவை ஏற்படுத்துவீர்கள்.

நிதி நிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. புதிய முதலீட்டுக்கான திட்டம் இன்று நீங்கள் மேற்கொள்ளலாம்.

உங்களிடம் காணப்படும் நேர்மறை ஆற்றல் காரணமாக இன்று ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும் நாள். சவால்கள் நிறைந்து காணப்பட்டாலும் அதனை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்வீர்கள். பயணங்கள் செல்ல வாய்ப்புள்ளது.

உங்கள் பணிகளை ஒரு கொள்கையுடன் மேற்கொள்வீர்கள். அது வெற்றிக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாக நடந்து கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

பயணம் மூலம் இன்று பண வரவு ஏற்படலாம். ஆன்மீக விஷயத்துக்காகச் செலவு செய்ய நேரலாம்.

இன்று உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




அதிக சிந்தனைகள் காரணமாக மனதில் குழப்பம் ஏற்படலாம். இன்று வெற்றிகள் காண கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய முடியாதபடி சில தடைகள் ஏற்படும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் கடினமான சூழ்நிலையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் குறைந்த அளவு பேச்சு வைத்துக் கொள்ளுங்கள். உறவில் அமைதியின்மை ஏற்படாமல் இருக்க இது மிகவும் அவசியம்.

போதிய பணம் கையில் இருந்தாலும் அதனை நீங்கள் பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்ய இயலாது. வீண் செலவு ஏற்படும்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று மிதமான பலன்களே கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நேர்மறை எண்ணங்களுடனான அணுகுமுறை கொள்ள வேண்டும்.

கவனக் குறைவு காரணமாக பணியில் சில தவறுகளை நீங்கள் செய்ய நேரலாம். உங்கள் பொறுப்புகளை அறிந்து நடந்துகொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்பாக மனம் திறந்து பேசுங்கள். இதனால் உறவுப் பிணைப்பு வலுப்படும்.

செலவுகள் அதிகரிக்கும். வீணான செலவுகள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

சளி மற்றும் இருமல் பிரச்சினகள் ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவு வகைகளை மேற்கொள்வதை தவிர்க்க வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.02.2024




இன்று உங்கள் இலக்குகள் நிறைவேறும். என்றாலும் முறையாக திட்டமிட்டால் இன்னும் சிறபான பலன்களைக் காணலாம்.

பணியில் உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும். கூடுதல் ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். திருமண நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியாக நேரம் கழிப்பீர்கள்.

இன்று வலுவான நிதி ஆதாரங்களை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இதனால் இன்று நீங்கள் துடிப்புடன் உற்சாகமாக இருப்பீர்கள்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைவதற்கு அதைரியம் தடையாக இருக்கும்.

பணியில் கவனம் செலுத்த முடியாதபடி பதற்றம் காணப்படும். அமைதியாக பணிகளை மேற்கொண்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள் துணையுடனான கருத்து வேறுபாடு காரணமாக உறவில் அமைதியின்மை காணப்படும். இதனை சமாளிக்க வேண்டும்.

எதிர்பாராத செலவினங்கள் காணப்படும். உங்கள் நிதியை கவனமாகக் கையாள வேண்டும்.

நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினை காணப்படும். ஓய்வெடுக்க நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.




இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். உங்களிடம் உறுதியும் தைரியமும் காணப்படும். உங்கள் இலக்குகளை அடைவது இன்று எளிதாக இருக்கும்.

உங்கள் பணியில் வளர்ச்சி காண்பீர்கள். இன்று உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பழகுவீர்கள். இதன் மூலம் குடும்பத்தில் உள்ள பிரச்சினைகள் தீரும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகள் பூர்த்தி ஆகும். நீங்கள் சிறிய வகையிலான கடன்கள் வாங்குவீர்கள்.

ஆரோக்கியமான மனதின் காரணமாக தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். எனவே உற்சாகமாக ஆற்றலுடன் இருங்கள்.




ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் மன ஆறுதலும் வெற்றியும் கிட்டும். இன்று வெற்றி காண யோசித்து செயல்பட வேண்டும்.

பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. பணியில் கவனம் செலுத்த உங்கள் மனதில் உள்ள தேவையற்ற எண்ணங்களை நீக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவில் அமைதியின்மை காணப்படும். உங்கள் துணையுடன் அன்பாக நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று வரவு, செலவு இரண்டும் காணப்படும். இன்று அதிக பண வரவுக்கான சாதகமான நாள் அல்ல.

அதிக உடல் உழைப்பு காரணமாக கால் வலி ஏற்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.









# 90 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை செலுத்த வேண்டிய நிலையில் இலங்கை!

## அரசியல் ரீதியில் மக்கள் ஏமாற வேண்டாம் என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



நாட்டில் சிலர் அழகான வார்த்தைகளை கூறி, மீண்டும் மக்களை ஏமாற்றக் காத்திருக்கும் நிலையில், இனிமேலும் ஏமாற்றுகளுக்கு மக்கள் ஆளாக வேண்டாம். இந்த நேரத்தில் நாட்டுக்கு பதில்களும்,தீர்வுகளும், நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டங்களுமே தேவையாக உள்ளன. 90 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை செலுத்த வேண்டிய நிலையில் இலங்கை தற்போது உள்ளது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப நிகழ்ச்சித் திட்டத்தின் 85 ஆவது கட்டமாக, காலி பலபிட்டிய ரேவத தேசிய பாடசாலைக்கு 10 லட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் நேற்று (04) கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்துள்ளவை வருமாறு,

தற்போதைய சூழ்நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்க, பாரம்பரிய கட்டமைப்பில் இருந்து வெளியேறி புதிய வழியில் சிந்திக்கும் வேலைத் திட்டம் நாட்டுக்குத் தேவை. நமது நாடு தற்போது 90 பில்லியன் அமெரிக்க டொலர் கடனைச் செலுத்த வேண்டியுள்ளது.

இந்தக் கடனை அடைக்கும்வரை நமது நாடு வங்குரோத்தான நாடாகவே அறியப்படும். இதை வைத்துப் பெருமைப்பட முடியாது. மகிழ்ச்சியடைய முடியாது. இது வருத்தமளிக்கும் விடயம்.

இந்த நாட்டை வங்குரோத்து நிலைக்கு இட்டுச் சென்ற நபர்களைச் சட்டத்தின் முன் கொண்டு வந்து, இழந்த வளங்களை மீண்டும் நாட்டுக்கு கொண்டு வருவோம்.

இலங்கையில் சிலர் புதிதாக ஒன்றைச் செய்வதற்கும், முன்னேறுவதற்கும் விருப்பமற்ற மனோபாவத்தில் உள்ளனர். முன்னேற விரும்பவில்லை. கால மாற்றங்களோடு பொருந்திப் போகாத, மேம்படுத்திக் கொள்ளாத, வளர்ச்சிப் பாதையில் நடைபோடாதவற்றை தவிர்த்து, கால மாற்றங்களோடு மேம்படுத்திக் கொண்டு, வளர்ச்சிப் பாதையில் நடை போடும் பழையதோடு புதியவற்றையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

சிலர் பழைய விடயங்களில் மாத்திரம் தொங்கிக் கொண்டிருக்கவே சதாவும் எதிர்பார்க்கின்றனர்.- என்றார்.







# போதைப் பொருள் சம்பந்தமான விழிப்புணர்வு சுதந்திர தினத்தில்

## மஸ்கெலியா வலயப் பொலிஸ் பிரிவில் இடம்பெற்றது

(மஸ்கெலியா நிருபர்)

போதை பொருள் சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்வு மஸ்கெலியா வலய பொலிஸ் பிரிவில் உள்ள ஏ.எஸ். பி.ஜயசிங்க தலைமையில் நேற்று (04) மதியம் மஸ்கெலியா நகரில் உள்ள பி.எம்.டி.கலாச்சார மண்டபத்தில் நடை பெற்றது.

நிகழ்வில் மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். எஸ். புஷ்பகுமார மற்றும் ஏழு பிரிவுகளில் பொறுப்பான பொலிஸார், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் கள், பாடசாலை அபிவிருத்திச் சட்டத் தின் உறுப்பினர்கள், கிராம உத்தியோ கத்தர்கள் நலன் விரும்பிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய எஸ். எஸ். பி. ஜயசிங்க, மிகவும் அமைதியான சூழலில் உள்ள மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் எந்த ஒரு அசம்பாவிதம் நடக் காமல் பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

அத்துடன் எமது பகுதியில் உள்ள 21 தமிழ் மற்றும் சிங்கள பாடசாலைகள் உள்ள பகுதிகளில் போதை மாத்திரை, வாசனை பாக்கு, புகையிலை, மது விற் பனை என்பவற்றை முற்றிலும் தடுக்க வேண்டும்.

ஆகவே நாம் ஒவ்வொருவரும் முன் வந்து எமது பகுதியில் உள்ள அனைத் துப் பாடசாலைகளுக்கும் அருகில் போதைப் பொருள் விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மற்றும் அங்காடிகள் பற்றிய தகவல்கள் எமக்கு வழங்க வேண்டும்.

அத்துடன் நாட்டில் போதைப் பொருள் ஒழிப்புத் திட்டத்தை பொலிஸ் மா அதி பர் தற்போது நடைமுறை படுத்தியுள் ளார். நாளாந்தம் விற்பனையில் ஈடு பட்டுவரும் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் படுகின்றனர். எமது பகுதியில் உள்ள அனைத்து மாணவர்களும் மற்றும் இளைஞர்கள் இவ்வாறான போதைப் பொருள் பாவனையில் இருந்து தடுப் பதற்கு எம்மால் முடிந்தளவு பங்க ளிப்பை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.





# மொட்டுக் கட்சியில் தகுதியானவர் இல்லையெனில் ஜனாதிபதி வேட்பாளராகும் சந்தர்ப்பம் ரணிலுக்கு!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தகவல்



"தற்போதைய ஜனாதிபதியை விட ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதற்கு தகுதியான ஒருவர் எமது கட்சியில் இருந்தால் அவருக்கு வழங்குவதே பொருத்தமானது. தகுதியானவர் இல்லை என்றால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே அந்த வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்."

– இவ்வாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் (மொட்டுக் கட்சியில்) கனேஹிமுல்ல பிரதேச சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்கான அரசியல் மாற்றத்தை உருவாக்கினார். அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்கள் பற்றி பேசினார். அனைவரும் ஒரே இடத்தில் அமர்ந்து நாட்டுக்காக உழைக்கச் சொல்லி அரசியலைத் தொடங்கினார். பொருளாதார சீர்திருத்தங்களில் நாட்டுக்கு நல்லது செய்வதே தவிர, மக்கள் கேட்பதை அல்ல என்றார்.

நாங்கள் எடுத்த முடிவுகள் மக்கள் முடிவு அல்ல. ரணில் விக்கிரமசிங்க செய்தது, நாட்டு மக்களுக்கு இந்த அமைப்பைப் பழக்கப்படுத்தியதுதான். விலை அதிகரிக்கும் போது அதிகரிக்கவும், குறையும் போது குறையவும் விலை சூத்திரம் வழங்கப்பட்டது. ரஷ்யா – உக்ரைன் போர் காரணமாக எரிபொருள் விலை அதிகரித்து வருகிறது.

அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கங்களில் இல்லாதது போன்று இன்று பேசுகின்றார். சந்திரிகா குமாரதுங்க வந்தபோது விகாரமஹாதேவி என்று கூறி அழைத்து வந்தவர். அவரை வெற்றியடைய வைத்து நான்கு அமைச்சர் பதவிகளையும் பெற்றார். அந்தத் தேர்தலில் ரெஜி அவர்கள் தோல்வியடைந்தார். அவர்கள் அரசாங்கத்தின் அங்கம் ஆனார்கள்.

மஹிந்த ராஜபக்ஷ அழைத்து வரப்பட்ட போது தெற்கிலிருந்து துட்டகெமுனுவாகவே அழைத்து வரப்பட்டார். மஹிந்த சிந்தனையே நாட்டுக்கு சிறந்தது என தமது தலைவர்கள் கூறுவதை பார்க்கின்றனர். எம்முடன் இணைந்த பின்னர் சரத் பொன்சேகாவுடன் இணைந்தார். அங்கிருந்து ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால உருவாக்கிய நல்லாட்சி அரசாங்கத்திற்கு சென்றார்.

தற்போது ஆர்ப்பாட்டங்களும், போராட்டங்களும் நடைபெற்று வருகின்றன. கிராம அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படும்போது, அதையும் நாசப்படுத்த முயற்சிக்கின்றனர். ஜனதா விமுக்தி பெரமுன அவர்களை கிராமத்தில் எந்த வேலையும் செய்ய விடவில்லை. அவர்களும் செய்யவில்லை. சமூக விரோதிகளாக செயல்படுகிறார்கள். கேவலமான அரசியல் செய்யாதீர்கள். நாட்டைப் பற்றிச் சிந்தித்து வேலை செய்யுமாறு நான் அனுரகுமாரவிடம் கேட்டுக் கொள்கிறேன்.

எனது அரசியல் கருத்துப்படி ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கட்சி சார்பற்றவராக வர வேண்டும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து அதை முடிவுக்கு கொண்டுவர உதவ வேண்டும்.

யுத்தத்தின் பின்னர் இந்த நாட்டில் அச்சமோ சந்தேகமோ இன்றி நிம்மதியாக வாழ்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காகவே அன்று நாம் மஹிந்தவை வெற்றியடையச் செய்தோம்.

நாங்கள் தேசியத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் போது, தேசியப் பிரச்சினையின் அடிப்படையில் அவர்களைத் தேர்ந்தெடுத்தோம்.

யுத்தம் முடிவடைந்த போது, உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக மக்கள் மஹிந்தவை தெரிவு செய்தனர். நாட்டை ஒரு முறைமைக்கு கொண்டு வர நல்லாட்சியை உருவாக்க மக்கள் மைத்திரிபால சிறிசேனவை தேர்ந்தெடுத்தனர்.

அப்போது நான் அவருக்கு எதிராக இருந்தவன். அவர் பணியாற்றுகிறாரா இல்லையா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். ஈஸ்டர் தாக்குதலுடன், தேசிய பாதுகாப்பு வீழ்ந்த போது கோட்டாபய கொண்டுவரப்பட்டார்.

ஈஸ்டர் தாக்குதலை நடத்தியதாக இன்று நாங்கள் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறோம். ஜே.வி.பி.யின் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த இப்ராஹிம் என்ற நபரும் அவரது மூன்று மகன்களும் சேர்ந்து குண்டுகளை வைத்தனர். மூன்று மகன்களும் ஜே.வி.பி. கூட்டமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள். கோட்டாபய வெற்றி பெறுவதற்காக ஜே.வி.பி. கத்தோலிக்க மக்களை கொன்றதா என்று மக்கள் விடுதலை முன்னணியிடம் கேட்கிறேன்." – என்றார்.